## மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2018

மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2015 ஜுன் 26 ஆந் திகதிய 1662பீ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சான தற்போதைய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவாக்கல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்டோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஜுன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பெறுமதி ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைவேலைப் பெறுமதி மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்த வேண்டியவைகள் என்பன உரிய திகதியில் உள்ளவாரான உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் மொத்த பெறுமதி கணக்கிற்கு கொண்டுவரப்படாததன் பெறுபேறாக ரூபா 79.59 மில்லியனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. | 79.59 | நடைமுறை வேலைக்கணக்கு மற்றும் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டிய வைகள் கணக்கு என்பவற்றில் குறையறை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான செயற்திட்டத்தின் நிதிநிலைமை நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், தேசிய வீதிகளின் 25.81 கிலோமீற்றர்களுக்கான புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதன் மீதான ஒப்பந்தமானது 02 ஒப்பந்தப்பொதிகளின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையானது 2015 ஜூன் 26 இல் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தப்பொதி - I ன் கீழான 02 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2018 சனவரி 29 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த அதேவேளை ஒப்பந்தப்பொதி II இன் கீழான ஏனைய 02 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் காணி சுவீகரிப்பிற்கு நேரம் எடுத்ததன் காரணமாக 2017 ஒக்டோபர் 05 இல் தாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், ஒப்பந்தமானது ஒப்பந்தப்பொதி I இன் கீழான கடுவெல – அதுருகிரிய வீதி மற்றும் வலகம – அதுருகிரிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மீது எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 30 சதவீதத்தில் 11 சதவீத பௌதீக செயலாற்றலினை அடைந்திருந்தது. | தாமதத்துடன் வீதி புனரமைப்பு வேலைகளை பூர்த்திசெய்வதற்கும் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கும் சாத்தியம். | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட திகதிகளின் வீதி புனரமைப்பு வேலைகளை பூர்த்தி செய்வதனை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தப்பொதி II இன் கீழான வீதி புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயலாற்றல் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் மின் இணைப்பு கம்பிகளை இடம்பெயர்த்தல் என்பவற்றின் தாமதம் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட வேண்டிய இலக்கான 49 சதவீதத்திற்கு கீழாக 10 சதவீதமாக காணப்பட்டது. | மேற்கூறியபடி. | மேற்கூறியபடி. | மேற்கூறியபடி. |